3rd August 1966]

**கனம் திரு. பூ. கக்கன்** : இதைப்பற்றி ஒரு தனிக் கேள்வி போட்டால் பரிசீலனை செய்யலாம்.

### மதுவிலக்கு வழக்குகள்

* 48 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

எல்லா போலீஸ் ஸ்டேஷன்களிலும், மதுவிலக்கு கேஸ்கள் (Headwar statement) வாரத்திற்கு எத்தனை என்று கேட்கப்படுகிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்** : துப்புதுலக்கப்பட்ட வழக்குகள் பற்றிய வார, அல்லது மாத அறிக்கைகள் போலீஸ் நிலையங்களிலிருந்து வரவழைக்கப்பட்டு போலீஸ் சூப்பிரண்டுகளால் ஆய்வு செய்யப்படுகின்றன. வாரத்திற்கு இத்தனை மதுவிலக்குக் குற்றங்கள் கண்டு பிடிக்க வேண்டும் என்கிற அளவு எதுவும் நிச்சயிக்கப்படவில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்** : ஒரு வாரத்திற்கு இத்தனை கேஸ்கள் போடவேண்டும் என்று சொல்லி, அப்படிப் போடாதவர்களுக்கு பனிஷ்மெண்டு கொடுத்திருக்கிறார்களே, அந்த பனிஷ்மென்டைப்பற்றிய குறிப்பை எழுதி அமைச்சர் அவர்களுக்கு அனுப்பினால், அத்தனையையும் 'வித்டிரா' செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : It is a hypothetical question. Let the hon. Member please send it first and then ask what action was taken on it.

### பசுக் கொலைத் தடுப்பு

* 49 **கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர்** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில், பசுக்களைக் கொலை செய்வதைத் தடுக்க அரசாங்கம் சட்டம் பிறப்பிக்குமா?

**கனம் திரு. பூ. கக்கன்** : தமிழ்நாட்டில் பசுக்கொலையைத் தடுக்கச் சட்டம் இயற்றுவதற்கான செயற் குறிப்பு எதுவும் இல்லை.

### *Food-rationing*

* 50 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the quantum of food-ration to manual workers in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.